மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

11. அரசினர் தீர்மானம்

விதி 30-(3)-ன்கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த 2001 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2001) நாளை (14-9-2001) எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30(3)-ஐ தளர்த்தி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 8 அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ் உள்ள, உள் இனம் 2 நாளை (14-9-2001)-ல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2001 செப்டம்பர் 13] [பேரவை தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2001), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 7/2001) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வருகின்ற சட்டமுன்வடிவும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தொடர்புடையது. எனவே, கருத்துக்களைக் கூற விரும்புகிற உறுப்பினர்கள் இந்த இரு சட்டமுன்வடிவுகள் குறித்தும் கூறலாம். திரு. கா. கந்தசாமி (குறுக்கீடு) கட்சிவாரியாக யாராவது ஒருவர் பேசுங்கள், (குறுக்கீடு) திரு. என். நன்மாறன் அல்லது திரு. டி. மணி, யாராவது ஒருவர் பேசலாம் (குறுக்கீடு) அது தனி. அது இப்போது இல்லை. இப்போது திரு. கா. கந்தசாமி பேசுங்கள்.

பிற்பகல் 5-20

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். தணிக்கை செய்கின்றபோது ஊராட்சிகளிடமிருந்து அந்தத் தணிக்கை நிதியை அரசு வசூலிக்க வேண்டுமென்று சொன்னால்,

---

@ 10-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.